# ஆற்றில் மூழ்கி உயிரிழந்த மூவரின் குடும்பத்திற்கு தலா ரூ. 2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 5 -

ஈரோடு மாவட்டம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் மூவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், வெங்கம்பூர்அ கிராமம் வழியாக செல்லும் காவிரி ஆற்றில் நேற்று (3.8.2023) காலை கோவில் திருவிழாவிற்காக தீர்த்தம் எடுக்கச் சென்ற, கொடுமுடி, தட்டாம்பாளையம், கொண்டலாம்புதூர் பகுதியைச் சேர்ந்த குப்புராஜ், த/பெ.கோபி (வயது19), ஜெகதீஸ்வரன், த/பெ.சிவகுமார் (வயது 18) மற்றும் சௌத்ரி, த/பெ.கோபி (வயது 14) ஆகிய மூவரும் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த இளைஞர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது நண்பர் களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

'நானோ' தொழில்நுட்பத்தை பயன்படுத்த

# ஒன்றிய அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 5 -

உணவுப் பொருட்களைப் நீண்ட காலத்திற்கு கெடாமல் பாதுகாப்பது, உறைந்த உணவு தொழில் நுட்பத்தை மேம்படுத்தவது, உணவுப் பொருட்களின் வாசனை, ஆயுட்காலம், நீடித்த பேக்கேஜிங் ஆகியவற்றை மேம்படுத்த "நானோ" தொழில்நுட்பத்தை பயன்படுத்த ஒன்றிய அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்கதிர் ஆனந்த் கேள்வி?



உணவுப் பொருட்களைப் நீண்ட காலத்திற்கு கெடாமல் பாதுகாப்பது தொடர்பான தொழில் நுட்பத்தில் ஒன்றிய அரசு ஏதேனும் புதுமையான அறிவியல் ஆராய்ச்சி செய்து வெற்றியை அடைந்துள்ளதா? ஆம் எனில் அது குறித்த விவரங்கள் யாவை?

புதுமையான உறைந்த உணவு தொழில் நுட்பத்தில் ஒன்றிய அரசு ஏதேனும் முன்னேற்றம் கண்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும்

தயாரிப்புகளின் ஆயுட்காலம், வாசனை, உணவுப் பொருட்களின் அமைப்பு மற்றும் பாதுகாப்பான மற்றும் நீடித்த பேக்கேஜிங் ஆகியவற்றை மேம்படுத்த நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அரசின்

உணவு பதப்படுத்தும் தொழில்துறைக்கான ராஜாங்க அமைச்சர் பிரஹலாத் சிங் படேல் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்

உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம் (MoFPI) சொந்தமாக R&D பணிகளை மேற்கொள்வதில்லை. இருப்பினும், MoFPIதற்போது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது, இது அமைச்சகத்தின் குடைத் திட்டத்தின் கீழ், அதாவது பிரதான் மந்திரி கிசான் SAMPADA Yojana (PMKSY) கீழ் மனித வளம் மற்றும் நிறுவனங்களின் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின் கீழ், பல்வேறு பல்கலைக்கழகங்கள், ஐஐடிகள், மத்திய மாநில அரசு நிறுவனங்கள், அரசு நிதியுதவி பெறும் நிறுவனங்கள், ஆராய்ச்சி&மேம்பாடு ஆய்வகங்கள் மற்றும் தனியார் துறையில் சிஎஸ்ஐஆர் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு பிரிவுகளுக்கு மானியமாக நிதி உதவி வழங்கப்படுகிறது.

தயாரிப்பு மற்றும் செயல்முறை மேம்பாடு, உபகரணங்களின் வடிவமைப்பு&மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சேமிப்பு, அடுக்கு வாழ்க்கை, பேக்கேஜிங், போன்றவற்றுக்காக பதப்படுத்தப்பட்ட உணவுத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மொத்தம் 272 R&D திட்டங்களுக்கு ஒன்றிய அரசு உதவியுள்ளது.

இதில், PMKSY தொடங்கப்பட்ட 2017-18 நிதியாண்டிலிருந்து 72 R&D திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

இவற்றில் 08 புதுமையான R&D திட்டங்கள் PMKSY இன் கீழ் மற்றும் 02 PMKSY க்கு முன் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

உணவுப் பொருட்களை நீண்ட காலத்திற்குப் பாதுகாப்பதில் MoFPIஉதவியளித்த புதுமையான R&D திட்டங்களின் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் புதுமையான உறைந்த உணவுத் தொழில்நுட்பம் பற்றிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. எவ்வாறாயினும், புதுமையான உறைந்த உணவு தொழில்நுட்பம் குறித்த ஏதேனும் R&D திட்ட முன்மொழிவு பெறப்பட்டால், திட்ட வழிகாட்டுதல்களை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு MOFPI இன் நிதி உதவிக்கு அது பரிசீலிக்கப்படலாம்.

தயாரிப்புகளின் அடுக்கு வாழ்க்கை, வாசனை, உணவுப் பொருட்களின் அமைப்பு மற்றும் பாதுகாப்பான மற்றும் நீடித்த பேக்கேஜிங் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி MoFPIஉதவிய R&D திட்டங்களின் பட்டியல் இணைப்பு B இல்கொடுக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகரம், 46வது வட்டத்தைச் சேர்ந்த ர.மாஹீன், 34வது வட்டத்தைச் சேர்ந்த செ.செல்வின்குமார் மற்றும் குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம், ஆளூரைச் சேர்ந்த எஸ்.இளம்பிறை ஷேக் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 03-08-2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



சேலம் முதல் செங்கப்பள்ளி வரையிலான நெடுஞ்சாலை (NH 544) 6 வழிச்சாலையாக மாற்ற வேண்டும் என நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ்குமார் யாதவ்வை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார். அதற்கு அவர், 6 வழிச்சாலையாக மாற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்
### ஆகஸ்ட் 5 (2013)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.**

**கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பு!

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி குற்றச்சாட்டு!

புதுடெல்லி,ஆக.5 –

திமுக துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை தி.மு.க. குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, குன்வர் டேனிஷ் அலி, அரவிந்த் கண்பத் சவந்த் ஆகியோர் நாடு முழுதும் பெண்கள் காணாமல் போதல் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான முக்கியமான கேள்விகளை நாடாளுமன்றத்தில் ஆகஸ்டு 1 ஆம் தேதி எழுத்துமூலம் எழுப்பியிருந்தார்.



"நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் பெண்கள், சிறுமிகள் காணாமல் போனது தொடர்பான வழக்குகள் பெரிய அளவில் அதிகரித்துள்ளன என்பது உண்மையா?அப்படியானால், அதன் விவரங்கள், மாநில வாரியாக என்ன?

காணாமல் போன மற்றும் மீட்கப்பட்ட அத்தகைய பெண்கள் மற்றும் சிறுமிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

குறிப்பிட்ட காலத்தில், மாநில வாரியாக குறிப்பாக தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் காணாமல் போன பெண்கள், சிறுமிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

இவர்களில் 18 வயது, மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட மைனர்கள் எத்தனை பேர்? மாநில வாரியாக விவரங்கள் தேவை.

பெண்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை வலுப்படுத்த ஏதேனும் சட்டத் திருத்தங்கள் செய்ய அரசுதிட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? இது தொடர்பாக அரசாங்கம் எடுத்த மற்ற பயனுள்ள நடவடிக்கைகள் என்ன?

பெண்கள், சிறுமிகள் கடத்தப்படும்போது மேற்கொள்ள வேண்டிய அவசர கால நடவடிக்கைகள் என்ன?" ஆகிய கேள்விகளை எழுப்பியிருந்தார்கள்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் அஜய் குமார் மிஸ்ரா எழுத்துபூர்வமாக அளித்த பதிலில்,

"தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) 'இந்தியாவில் குற்றங்கள்' என்ற வெளியீட்டில் குற்றங்கள் பற்றிய புள்ளி விவர தரவுகள் இருக்கின்றன.

காணாமல் போன பெண்கள், காணாமல் போன சிறுமிகள், மீட்கப்பட்டவர்கள், இன்னமும் மீட்கப்படாதவர்கள் குறித்தான மாநிலம் தழுவிய விவரங்கள் 2016 ஆம் ஆண்டு முதல் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தால் வெளியிடப்பட்டு வருகின்றன. இதன் கடைசி வெளியீடு 2021 இல் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக காணாமல் போன பெண்களின் எண்ணிக்கை தொடர்பான விவரமும் வெளியிடப்பட்டுள்ளது. 2017 முதல் இந்த விவரங்களை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் சேகரிக்கத் தொடங்கியது.

இதன்படி தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் காணாமல் போன சிறுமிகள் (18 வயதுக்கு குறைந்தோர்) எண்ணிக்கை 2017 இல் 75, 2018 இல் 90, 2019 இல் 88, 2020 இல் 112, 2021 இல் 144 என அதிகரித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் காணாமல் போன பெண்களின் எண்ணிக்கை 2017 இல் 191, 2018 ஆம் ஆண்டில் 195, 2019 இல் 167, 2020 ஆம் ஆண்டில் 224, மேலும் 2021 ஆம் ஆண்டில் 369 என அதிகரித்திருக்கிறது.

போலீஸ் மற்றும் பொது ஒழுங்கு ஆகியவை அரசியல் அமைப்பின் ஏழாவது அட்டவணையில் மாநில அரசுகளின் பொறுப்பில் வருகின்றன. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதும், குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும், பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்று வழக்கு நடத்துவதும் மாநில அரசுகளின் பணியாக இருக்கிறது.

குற்றவியல் நீதி முறையை வலிமைப்படுத்தும் விதமாக புதிய சட்டங்களை இயற்றுதல், ஏற்கனவே இருக்கும் சட்டங்களை திருத்தி வலிமைப்படுத்துதல் ஆகியவை ஓர் தொடர் நடவடிக்கையாக அரசாங்கத்தால் அந்தந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய அரசு குற்றவியல் சட்டங்களின் ஆய்வு, குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய தண்டனைச் சட்டம் முதலியன பற்றி ஆராய அனைத்து தரப்பினரின் ஆலோசனையோடு ஏற்கனவே ஒரு விரிவான செயல்முறையைத் தொடங்கியுள்ளது.

பெண்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக ஒன்றிய உள்துறை அமைச்சகம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தியா முழுமைக்கும் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும் பெண்களுக்கான அவசரகால உதவிப் பொறிமுறையின்படி சர்வதேச அங்கீகாரம் பெற்ற எண் 112 அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து வகையான அவசர நிலைகளில் இருந்தும் பெண்களுக்கு உதவி செய்வதற்கான கணினி அடிப்படையில் இந்த பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து காவல் நிலையங்களிலும் பெண்களுக்கான உதவி அமையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் மனிதக் கடத்தல் தடுப்புப் பிரிவுகள் அமைக்கப்படுகின்றன.

ஒன்றிய உள்துறை அமைச்சகம் மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகளுக்கு பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை கையாள்வது பற்றி அறிவுரைகளை ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அவை உள்துறை அமைச்சக https://www.mha.gov.in. இணையதளத்தில் கிடைக்கின்றன.

ஒன்றிய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையும் இவ்விவகாரத்தில் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட்டு வருகிறது. குழந்தைகள் காணாமல் போன வழக்குகளுக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறை (SOP)களை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ளது

காவல்துறை, குழந்தைகள் நலக் குழுக்கள் மற்றும் சிறார் சிர்திருத்த வாரியம் ஆகியவற்றுக்கு காணாமல் போன மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது மீட்கப்பட்ட குழந்தைகளின் வழக்குகளைக் கையாள்வதற்கு உதவி, காணாமல் போன குழந்தைகள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் தொடர்பாக சேவைகளை இயக்கி வருகிறது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்.

இதற்காக ஹெல்ப்லைன் எண். 1098 என்பது 24/7 செயல்படுகிறது. இது தவிர ரயில்வே சைல்டு லைன் என்ற திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. முக்கியமான ரயில் நிலையங்களில் உதவி தேவைப்படும் குழந்தைகளுக்காக இது இயக்கப்படுகிறது.

மேலும், 'டிராக் சைல்டு போர்டல்' என்ற திட்டத்தையும் பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தொடங்கியுள்ளது. காணாமல் போகும் குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதில் இது முக்கிய பங்காற்றுகிறது. இந்த திட்டத்தின்கீழ், காவல் நிலையங்கள், சிறார் நீதி வாரியங்கள் மற்றும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களுக்கு லாகின் வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் அவர்கள் காணாமல் போன மற்றும் கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகள் பற்றிய தகவல்களை போர்ட்டலில் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். ட்ராக் சைல்ட் போர்ட்டலின் ஒரு கூறு "கோயாபயா" ஆகும், இதில் எந்த குடிமகனும் காணாமல் போன குழந்தையையும் அவர்கள் இருக்கும் இடத்தையும்பற்றி விரைவில்புகாரளிக்கலாம்.

மேலும் பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஒன் ஸ்டாப் சென்டர்' என்ற திட்டத்தையும் நாடு முழுதும் நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பெண்கள் தனி இடங்களிலோ, பொது இடங்களிலோ வன்முறையால் பாதிக்கப்பட்டால் உடனடி மற்றும் சாதாரண உதவிகளை இந்த மையங்கள் செய்யும். போலீஸ், மருத்துவம், சட்டம் சார்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட உதவிகளை இந்த ஒன் ஸ்டாப் சென்டர்கள் மூலம் பெறமுடியும். மேலும் வன்முறைக்கு எதிரான போராட்டத்துக்கான உளவியல் ஆலோசனையும் இத்திட்டத்தில் வழங்கப்படுகிறது" என்று ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

குறு,சிறு தொழில் முனைவோர்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தில்

# பயனாளிகளுக்கான கடன் தொகை தாமதமாக வழங்கப்படுவது ஏன்?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி,ஆக.5 -

"குறு,சிறு தொழில் முனைவோர்களுக்கான Credit Linked Capital Subsidy Scheme (CLCSS) எனப்படும் மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டத்தில் பெரும்பாலான பயனாளிகளுக்கு நோடல் ஏஜென்சியிடமிருந்து வங்கியில் துவங்கப்படும் கடன் கணக்கிற்கு கடன் தொகை தாமதமாக செலுத்தப்படுவது ஏன்? தமிழ்நாட்டில் மட்டும் இது குறித்து எத்தனை புகார்கள் எழுந்துள்ளன? 2019 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?" என தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.



அதற்கு பதிலளித்த ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை இணையமைச்சர் பானு பிரதாப் சிங் வர்மா அவர்கள் "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் CLCSS திட்டத்தின்படி தகுதியான பயனாளிகளுக்கு கடன் கணக்கில் சரியான நேரத்தில் நிதி செலுத்திட நோடல் வங்கிகள் மற்றும் ஏஜென்சிகளுக்கு முறையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுள்ளன. அதன் படி ஒதுக்கப்பட்ட நிதி அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளது. அதோடு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள அனைத்துக் குறைகளையும் நிவர்த்தி செய்வதற்காக 'தி சாம்பியன்ஸ்' என்ற இணையதளம் 2020 இல் தொடங்கப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 29 புகார்கள் பெறப்பட்டு அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 2019-20ஆம் நிதியாண்டில் 324 பேரும் 2020-21 ஆம் நிதியாண்டில் 569 பேரும், 2021-22 ஆம் நிதியாண்டில் 68 பேரும் பயனடைந்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெருக்க

# பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் உடனே தொடங்குக!

## மக்களவையில் டாக்டர் செந்தில்குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 5 -

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.செந்தில்குமார் நாடாளுமன்றத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது :

தருமபுரி மாவட்டத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருக்க பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் தொடங்க கடந்த 2010 முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் உத்தரவின் பெயரில் தர்மபுரி மாவட்ட நிர்வாகம் மூலம் நெக்குந்தி கிராமத்தில் அதற்கான இடம் அடையாளம் காணப்பட்டு தேர்வு செய்யப்பட்டது.இதனை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பின் சார்பில் அந்த இடத்தினை வந்து பார்வையிட்டு ஆய்வு செய்தனர் ஆனால் அதன் பிறகு பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் தொடங்குவதற்கான எந்த விதமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.



தொழில்துறையில் பின்தங்கிய தர்மபுரி மாவட்டத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் விரைவாக தொடங்கினால் மாவட்டத்தை சேர்ந்த 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவே ஒன்றிய பாதுகாப்பு துறை அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு மூலம் இப்பணியை விரைவாக தொடங்குவதற்கு வழிவகை செய்து தருமபுரி மாவட்டத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் தொடங்கி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தார்.


## பெருநகர சென்னை மாநகராட்சி
## கட்டடத்துறை

க.து.ந.க.எண்.பி1/1726/2023

**மின்னணு குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

| வ. எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் தோராய மதிப்பு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **B.D.C.NO.B1/1726/2023** Construction of 8 Class rooms with staircase and toilet in High School at Padasalai Street in Dn-21, Zone - 2 (Under NNT Scheme) | 233.52 |
| | **B.D.C.NO.B1/1765/2023** Construction Of School Building (4 Class Rooms and Toilets) in Chennai Primary School at Annai Sivagami Nagar in Dn-03, Zone - 01 (Under NNT Scheme) | |

ஒப்ப நாள் மற்றும் நேரம் : 21.08.2023, 3.00 pm
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 22.08.2023, 3.30 pm

மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in & www.chennaicorporation.gov.in

செ.ம.தொ.இ / 4291 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)

## பெருநகர சென்னை மாநகராட்சி
## பேருந்து சாலைகள் துறை

பே.சா.து.ந.க.எண்.பி4/3422/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு குறுகிய கால மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது**

**NSMT (2023-24)**

| பணியின் விவரம் | சிப்பம் எண் | பணியின் மதிப்பு தோரயமாக (18% GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 4, 7, 8 & 9ல் உள்ள 27 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் ப்ளாக் சாலைகள் மேம்படுத்தும் பணி NSMT (2023-24) | 9 | பணியின் மதிப்பு ரூ.255.00 இலட்சம் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

1. ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **17.08.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
3. இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **18.08.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 4305 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)